මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
තැපැල් පෙට්ටිය 543, අංක. 180, ටී.බී. ජයා මාවත, කොළඹ - 10.
தபால் பெட்டி : 543, இல. 180, ரீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10.
P.O. Box : 543, No. 180, T.B. Jayah Mawatha, Colombo - 10.
E-mail : director@muslimaffairs.gov.lk. Web : www.muslimaffairs.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No. } MRCA/WD/CMA/SS/39   ඔබගේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2025.12 - 31

## அறிவித்தல்

### க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் - 2026

2026 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரக் கல்வியைத் தொடங்குவதற்கு தகுதி பெற்ற (முதலாம் ஆண்டு) மாணவர்களுக்காக, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இலங்கை வக்.்ப் சபையுடன் இணைந்து, முஸ்லிம் தரும நிதியத்திலிருந்து (MCF) புலமைப்பரிசிலை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த புலமைப்பரிசில் திட்டம், வேறு எந்த நிறுவனத்திலிருந்தும் புலமைப்பரிசில் அல்லது நிதியுதவி பெறாத, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானம், கணிதம், வணிகம், கலை மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் க.பொ.த உயர்தர பாடத்திட்டத்தைப் பயிலும் மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும் தேவையான அனைத்து துணை ஆவணங்களையும் இணைத்து, 2026 ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்காணலின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நிரப்பப்பட்ட விண்ணப்பத்துடன் கீழ்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்:

1. உண்மைப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று
2. உண்மைப்படுத்தப்பட்ட க.பொ.த (சா.த) தேர்வு முடிவுகளின் பிரதியொன்று
3. உண்மைப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று
4. குறைந்த வருமானம் உள்ளவர் என்பதைக் உறுதிப்படுத்தும் கிராம சேவகர் சான்றிதழ்
5. குறைந்த வருமானம் உள்ளவர் என்பதைக் உறுதிப்படுத்தும் பள்ளிவாசல் கடிதம்
6. பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதம்

எம். எஸ். எம். நவாஸ்
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்


කාර්යාලය - පොදු / அலுவலகம் - பொது / Office - General } 011 2667909
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director } 011 2669994
සහකාර අධ්‍යක්ෂ / உதவிப் பணிப்பாளர் / Asst. Director } 011 2669979 wakf, 011 2669968 Religious, 011 2669989 Admin
ෆැක්ස් අංකය / தொலை நகல் இல. / Fax No. } 011 2692147